எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலங்கை கடல்கடந்த முஸ்லிம் கல்விசார் நம்பிக்கைப் பொறுப்பு" என்ற பெயரின் கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக் கோள்கள்.*

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரப்) பரீட்சையில் சித்தியடைந்து விஞ்ஞானம், பொறியியல் அத்துடன் மருத்துவம் ஆகிய பீடங்களில் பல்கலைக் கழகத்திற்கு பிரவேசித்துள்ள இலங்கையின் வறிய முஸ்லிம் மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்கள் வழங்குதல் ;

(ஆ) விஞ்ஞானப் பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரப்) பரீட்சைக்கு அமரும் வறிய முஸ்லிம் மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்கள் வழங்குதல் ;

(இ) ஏற்கனவே பல்கலைக்கழகத்தில் இருப்பவர்களும் நிதிவசதி போதாமையால் தங்கள் பாடநெறிகளைப் பூர்த்தி செய்ய இயலாதிருப்பவர்களுமான வறிய முஸ்லிம் மாணவர்களுக்கு நிதியுதவி வழங்குதல்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் தலைவரையும் செயலாளரையும் மற்றும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கத் தெரிவுசெய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட வேறு பதவி தாங்குநர்களையும் கொண்ட ஆளும் சபையொன்றினால் (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்வகிக்கப்படல் வேண்டும்.

(2) முதலாவது சபை இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு உடன் முற்போந்த தேதியன்று பதவிவகிக்கும் ஆளும் சபையின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

